செ.வெ.எண்: 48 நாள்: 17.03.2017

**ஆவுடையார்கோவிலில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில் 150 நபர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், புதுவாழ்வுத்திட்டம் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலகம் சார்பில் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.03.2017) நடைபெற்றது.

இந்த வேலைவாய்ப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து தேர்வு பெற்றவர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு படித்த வேலைவாய்ப்பற்ற ஆண், பெண் இருபாலர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் வகையில் தனியார் தொழில் நிறுவனங்களைக் கொண்டு வேலைவாய்ப்பு முகாம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் இரண்டாம் கட்ட வேலைவாய்ப்பு முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி மற்றும் கறம்பக்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த படித்த வேலைவாய்ப்பற்ற ஆண், பெண் இருபாலர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என மொத்தம் 1020 நபர்கள் கலந்து கொண்டனர்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் புதுக்கோட்டை, திருச்சி, விருத்தாச்சலம், மதுரை, தஞ்சாவூர், சென்னை, கோயம்புத்தூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த 12 தனியார் நிறுவனங்கள் முகாமில் கலந்து கொண்டனர். இதில் தகுதியுள்ள 150 நபர்களை தங்களது நிறுவனங்களுக்கு நல்ல சம்பளத்தில் பணியமர்த்திக் கொண்டதுடன் வேலைவாய்ப்பிற்கான பணிநியமன ஆணையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 31 கிராம ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு மொத்தம் ரூ.17.05 இலட்சம் மதிப்பில் துவக்க நிதியுதவித்தொகைக்கான காசோலைகளும், 5 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.10.40 லட்சம் மதிப்பில் வங்கிகடன் உதவித்தொகைக்கான காசோலைகளும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.75,000/- மதிப்பில் கடன் உதவித்தொகைக்கான காசோலைகளும், செவிலியர் உதவியாளர் படிப்பு முடித்த 30 நபர்களுக்கு சான்றிதழும் என பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே இம்முகாமில் பணிநியமன ஆணை பெற்றவர்கள் சிறப்பாக பணிபுரிந்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணக்குமார், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணன், மாவட்ட திட்ட மேலாளர் (புதுவாழ்வுத்திட்டம்) திருமதி.வசுமதி மவாட்ட தொழில் மைய உதவி பொறியாளர் திருமதி. திரிபுரசுந்தரி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**